# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி

**OS.No.93/2018 நாள். 30.11.2022**

போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டடது. சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர். நீதிமன்றத்தில் கிரேடு 3 பென்ச் கிளர்க் திரு. ராமன் அவரால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **கோட்டீஸ்வரன்** | **வயது** | 25 |
| **த/பெ. க/பெ.** | **ராமசாமி** | **மதம்** | |
| **முகவரி** | **அகரம்** | **தொழில்** | நகர பஞ்சாயத்தில் தற்காலிக வேலை |

**<u>பி.சா.1 ஆஜர், வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**1)** நான் B.Sc Computer Science படித்துள்ளேன். எனக்கு எனது குடும்ப தலைமுறைகள் பற்றிய விவரம் தெரியும். 4 வது தலைமுறை ஆரிமுத்து நைனாருக்கு எத்தனை வாரிசுகள் என்று எனக்கு தெரியாது. ஆரிமுத்து நைனாரின் மகன் ராமசாமி நைனாரை தெரியும், அவருக்கு உடன்பிறந்தவர்கள் யார் என்று எனக்கு தெரியாது. ஆரிமுத்து நைனாருக்கு இராமசாமி நைனார் மட்டும் ஒரே வாரிசு என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. இராமசாமி நைனாருக்கு குப்புசாமி நைனார், தங்கவேல் (எ) ஆரிமுத்து நைனார், கிருஷ்ணமூர்த்தி ஆகிய மூன்று பேர் வாரிசாக உள்ளார்கள். கிருஷ்ணமூர்த்தியின் பெயர் கிருஷ்ணன் (எ) முத்துசாமி நைனார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இராமசாமி நைனார் மற்றும் அவரது வாரிசுகள் யாரும் தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான்.

2) குப்புசாமி நைனாருக்கு வாரிசுகள் யாரும் கிடையாது. பெரியதம்பி நைனார் குப்புசாமி நைனாருக்கு என்ன உறவு என்றால் தத்து பிள்ளை ஆவார். குப்புசாமி நைனாருக்கு வாரிசு இல்லாத காரணத்தால் பெரியதம்பி நைனாரை இளம் வயதிலேயே தத்து எடுத்துவிட்டார்கள் என்றால் சரிதான். தங்கவேல் நைனாரின் வாரிசுகள் பெரியதம்பி நைனார், கோவிந்தசாமி, இராமசாமி நைனார், துளசி, லட்சுமணன், வெங்டேச பெருமாள் ஆகிய ஆறு நபர்கள் ஆவார்கள். நான் இராமசாமி நைனாரின் வாரிசு ஆவேன். என்னுடன் உடன் பிறந்தவர் ஒரு அக்கா மட்டும் உள்ளார். வழக்கு

சொத்து அமைந்துள்ள கோயில் காளியம்மன் மற்றும் துரௌபதி அம்மன் என்றால் சரிதான். வழக்கு சொத்தின் சர்வே எண். விஸ்தீரணம் எனக்கு தெரியாது. மேற்படி கோயிலை எந்த வருடத்தில் கட்டினார்கள் என்று எனக்கு தெரியாது. எனது தாத்தா ஆரிமுத்து நைனார் கட்டினார்.

3) அந்த கோயிலை கட்டி அவர்தான் தர்மகத்தாவாக இருந்து பரிபாலனம் செய்து வந்தார். மேற்படி கோயிலானது ஊர் பொதுக்கோவில் ஆகும். மேற்படி கோயிலானது ஊர் பொதுகோவில் அல்ல என்றும், ஆரிமுத்து நைனார் கட்டி பராமரித்து வருவதால் எங்கள் குடும்பத்தை சேர்ந்தவர்கள்தான் வழிவழியாக அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். ஊர்பொதுமக்களுக்கு வழிபாடு செய்யும் உரிமை மட்டும்தான் உள்ளது. மற்ற அனைத்து உரிமைகளும், ஆரிமுத்து நைனாரின் வாரிசுகளுக்கு மட்டும்தான் உள்ளது. ஆரிமுத்து நைனாருக்கு பிறகு அவரது மகன் இராமசாமி கோயில் விவகாரங்களை பார்த்து வந்தார்.

4) அவர்தான் தர்மகத்தாவாகவும் செயல்பட்டு வந்தார் என்றால் சரிதான். அவருக்கு பின்னாடி தங்கேவல் (எ) ஆரிமுத்து நைனார் கோயிலை எடுத்து நடத்தி வந்தார். இராமசாமி நைனாருக்கு பிறகு குப்புசாமி நைனார்தான் கோயிலை எடுத்து நடத்தி வந்தார் என்று சொன்னால் சரியல்ல. தங்வேல் நைனார் எத்தனை வருடங்களாக கோயிலை பராமரித்து வந்தார் என்று சொன்னால் எனக்கு தெரியாது. குப்புசாமி நைனாரும் நிர்வாகம் செய்தாரா என்று எனக்கு தெரியாது. மேற்படி கோவிலை பொறுத்து ஆரிமுத்து நைனாரின் மூத்த வாரிசுகள் கோயிலை பராமரித்து தர்மகத்தாவாக இருந்துவர வேண்டும் மென வாய்மொழியாக பேசி முடிவெடுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான்.

5) அதன் அடிப்படையில் ஆரிமுத்து நைனாருக்கு பிறகு இராமசாமி நைனாரும் பிறகு, குப்புசாமி நைனாரும் கோயிலை பராமரித்து நிர்வாகம் செய்து வந்தார்கள் என்று சொன்னால் எனக்கு தெரியாது. குப்புசாமி நைனாருக்கு பிறகு பெரியதம்பி நைனார்தான் நிர்வாகம் செய்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. குப்புசாமி நைனாருக்கு பிறகு எனது தாத்தா தங்வேல் (எ) ஆரிமுத்து நைனார்தான் நிர்வாகம் செய்து வந்தார். ஆரிமுத்து நைனார் நிர்வாகம் செய்த விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. அதற்கு ஆதரவாக ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை.

6) தங்கவேல் (எ) ஆரிமுத்து நைனார் எதன் அடிப்படையில் கோயிலை நிர்வாகம் செய்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. தங்வேல் நைனார் இறந்து சுமார் 25 வருடங்கள் மேல் ஆகிறது. தங்கவேல் நைனாரை நான் நேரடியாக பார்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். இராமசாமி நைனார் எந்த வருடத்தில் இருந்து கோயிலை நிர்வாகம் செய்து வருகிறார் என்றால் எனக்கு நினைவு தெரிந்த முதல் நிர்வாகம் செய்கிறார்.

7) இராமசாமி நைனார் நிர்வாகம் செய்வதை காட்டுவதற்கு வரவு செலவு கணக்கு மற்றும் அறிவிப்புக்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். 2003 ஆம் வருடத்திலிருந்து நிர்வாகம் செய்வதை காட்டுவதற்கு கணக்கு வழக்குகளை தாக்கல் செய்துள்ளேன். 2010 ஆம் ஆண்டு வரை கணக்கு வழக்குகளை தாக்கல் செய்துள்ளேன். நான் கூறியது போல் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. வாதி பெரியதம்பி 2002 ஆம் ஆண்டு முதல் 2004 ஆம் ஆண்டு வரை உடல்நலம் சரியில்லாமல் இருந்தார் என்றும், அப்போது எனது தகப்பனார் தற்காலிகமாக நிர்வாக பொறுப்பை பார்த்தார் என்று சொன்னால் சரியல்ல.

8) 2005 ஆம் ஆண்டு முதல் வாதிதான் நிர்வாக பொறுப்புக்களை கவனித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. வாதி இளம் வயதினாராக இருந்த காரணத்தால் தங்கவேல் (எ) ஆரிமுத்து நைனார் குறுகிய காலம் மட்டும் நிர்வாகம் செய்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. கோயிலுக்கு மின் இணைப்பு உள்ளது என்று சொன்னால் சரிதான். தற்போது கோவில் இடித்து கட்டப்பட்டுள்ளதால் மின் இணைப்பு கிடையாது. கோயில் இடிப்பதற்கு முன்பு மின் இணைப்பு இருந்தது என்றால் சரிதான். மின் இணைப்பு யார் பேரில் இருந்தது என்று எனக்கு தெரியாது. கோயில் இடிக்கப்பட்ட காரணத்தாலும், மின் இணைப்பை கட்டாத காரணத்தாலும் மின் இணைப்பானது துண்டிக்கப்பட்டது.

9) மின் இணைப்பானது குப்புசாமி நைனார் பேரில்தான் இருந்தது என்றும், அந்த ஆதாரத்தை அழிப்பதற்காக மின் இணைப்பானது துண்டிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி கோயிலின் பொறுப்பை 2018 ஆம் வருடம் 6 வது மாதம் 14 ஆம் தேதிக்கு பிறகு நான் பொறுப்பு எடுத்துக்கொண்டேன். எனது அப்பா இறப்பிற்கு

முன்பு அவர் தர்மகத்தாவாக இருந்தார். அதன் அடிப்படையிலும் கிராமத்தில் உள்ளவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்கவும் நான் பொறுப்பு எடுத்துக்கொண்டேன். நிர்வாக உரிமை கொடுக்க ஊர் பொதுமக்களுக்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல.

10) எங்களுடைய பரம்பரையை சேர்ந்தவர்கள் மட்டும்தான் நிர்வாக உரிமையை கொடுக்க உரிமை உள்ளது என்றும், ஊர் பொதுமக்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய பரம்பரையை சேர்ந்தவர்கள் எனக்கு நிர்வாக உரிமையை கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. யார் யார் என்னுடைய பரம்பரையை சேர்ந்தவர்கள் எனக்கு நிர்வாக உரிமையை கொடுத்தார்கள் என்றால் எனது தகப்பனார் உரிமையை அவர் இறந்த பிறகு நானே எடுத்துக்கொண்டேன். எனது தகப்பனார் நிர்வாக பொறுப்பை தற்காலிகமாக மூன்று வருடங்கள் மட்டும் பார்த்தார் என்றும், அதன் பிறகு வாதிதான் நிர்வாகம் செய்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல.

11) (**வா.சா.ஆ.3 ஆவணம் கோவிலின் கணக்கு வழக்கு நோட்டு ஆகும் என்றால் சரிதான்.**) மேற்படி நோட்டில் முதல் பக்கத்தில் ஊர் நோன்பு வரிசை 124, 16.05.1990 என்று A.பெரியதம்பி நைனார், அகரம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி கணக்கு நோட்டில் 364 பக்கங்கள் கொண்டது என்றால் சரிதான். மேற்படி கணக்கு புத்தகத்தில் 1998 ஆம் ஆண்டு வரை கணக்கு வழக்கு உள்ளது என்றால் சரிதான். அதில் காட்டப்பட்டுள்ள விவரங்கள் கோயில் நிர்வாக செலவுகள் என்றால் சரிதான்.

12) என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 கோவிலின் வரவு செலவு கணக்கு 2 வது நோட்டு புத்தகம், புத்தகத்தில் தமிழ் வருடத்தை குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். விக்ரம வருடம், மாசி மாதம் ஆரம்பித்து பின்னர் 25.06.1953 என்று முடிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி நோட்டை குப்புசாமி நைனார் பராமரித்து வந்தார் என்று சொன்னால் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3, 3 வது நோட்டு புத்தகத்தின் உள்ளது கோயிலின் கணக்கு வழக்கு ஆகும். மேற்படி கணக்கு நோட்டு புத்தகத்தில் பரிதாபி ஆண்டு சித்திரை மாதம் என்று ஆரம்பித்து தொடங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

13) மேற்படி கணக்கு புத்தகத்தில் 270 பக்கங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கணக்கு வழக்கை எனது மூதாதையார்கள் பராமரித்து வந்தார்கள் என்றால் சரிதான். வழிவழியாக பராமரித்து வந்து கோயில் நிர்வாக பொறுப்புக்கு வருபவர்களிடம் ஒப்படைத்து விடுவார்கள் என்றால் சரிதான். ஆரிமுத்து நைனார் இராமசாமி நைனாரிடம் ஒப்படைத்தார் என்றால் சரிதான். இராமசாமி நைனார் குப்புசாமி நைனாரிடம் ஒப்படைத்தார் என்றால் எனக்கு தெரியாது. 1970 ல் குப்புசாமி நைனார் வாதியிடம் கணக்குகளை ஒப்படைத்தார் என்றால் எனக்கு தெரியாது. அதிலிருந்து தற்போது வரை மூன்றாண்டுகள் நீங்கலாக அவர்தான் கோயில் பொறுப்புகளை நிர்வாகம் செய்கிறார் என்று சொன்னால் சரியல்ல.

14) கோயிலில் தற்போது ஆறு சிலைகள் உள்ளது. மேற்படி விக்ரகங்களை யார் வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது. விக்ரக சிலைகள் தற்போது என்னுடைய பொறுப்பில் உள்ளது. சிலைகள் கோயிலில் உள்ளது. கோயில் சிலைகள் என்னுடைய கட்டுப்பாட்டில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 11.02.2019 ஆம் தேதி கோயிலில் கும்பா அபிசேகம் நடைபெற்றது. நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கும் போது கும்பாபிசேகம் நடைபெற்றது என்று சொன்னால் சரிதான். ஏற்கனவே பேசியிருந்தது போல் கும்பாபிசேகம் நடைபெற்றது. வழக்கு நிலுவையில் இருந்ததால் பேசி கும்பாபிசேகம் நடைபெற்றது என்று சொன்னால் சரியல்ல.

15) கோயிலை இடித்தபிறகு புதிதாக கட்டும்போது நாங்கள் ஆட்சேபனை செய்ததால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பி.சா.ஆ.1 ஆவணத்தை 2007 ஆம் வருடம் துரௌபதி விக்ரக சிலை காணாமல் போய்விட்டது. அது அப்போது எனது அப்பா தர்மகத்தாவாக இருந்தார் என்பதை காட்டுவதற்கு இந்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். புகார் எனது அப்பாதான் கொடுத்திருந்தார். புகார் முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. மேற்படி ஆவணத்தில் ஜம்புகுட்டப்பட்டியில் சிலை கிடைத்ததாகவும்,அதை வட்டாட்சியர் அலுவலகத்தில் ஒப்படைத்தாகவும் காட்டப்பட்டுள்ளது என்றால் மேற்படி ஆவணத்தை பார்த்தால் சரிதான்.

16) இடைக்கால பொறுப்பில் எனது தகப்பனார் பொறுப்பில் இருந்ததை பயன்படுத்தி மேற்படி ஆவணம் உருவாக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

எனது தகப்பனார் நிர்வாக பொறுப்பில் இல்லை என்றும், தவறாக ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. கோயில் அர்ச்சகர் பரமேஸ்வரன் மற்றும் பரந்தாமன் ஆவார்கள். பி.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள கையெழுத்து எனது தகப்பனாருடைய கையெழுத்தாகும். எனது தகப்பனார் அர்ச்சகராக இருக்கவில்லை. மேற்படி ஆவணத்தில் அர்ச்சகர் என்று கையெழுத்து போடப்பட்டது என்றால் சரிதான். அதில் பஞ்சலோக சிலை திருடப்பட்டு ஒப்படைக்கப்பட்டதை பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

17) தர்மகர்த்தாவாகவும், அர்ச்சகராகவும் ஒரே நபர் செயல்பட முடியாது என்று சொன்னால் சரிதான். பி.சா.ஆ.3 ஆவணம் யாருக்கு கொடுக்கப்பட்டது என்று குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். பி.சா.ஆ.3 ஆவணத்தை வாதி வைத்திருந்ததை நான் எடுத்து வந்து தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பி.சா.ஆ.4, பி.சா.ஆ.5 ஆவணங்கள் வழக்கிற்கு பின்னட்ட ஆவணம் என்றால் சரிதான். வழக்கிற்காக மேற்படி ஆவணம் தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. பி.சா.ஆ.7 ஆவணம் கோயிலை இடிப்பதற்கு முன்பு வாதியால் எடுக்கப்பட்டு அலுவலகத்தில் வைத்திருந்ததை நான் வழக்கிற்காக எடுத்து தாக்கல் செய்கிறேன் என்றால் சரியல்ல. பி.சா.ஆ.6 ஆவணத்தை யார் பராமரித்து வந்தார்கள் என்று குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான்.

18) மேற்படி ஆவணத்தில் 2001 ஆம் வருடம் முதல் 2005 ஆம் ஆண்டு வரை கணக்கு உள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை கோயிலில் இருந்து எடுத்து வந்து தாக்கல் செய்கிறேன் என்றால் சரியல்ல. துரௌபதி அம்மன் கோவிலில் மகாபாரதம், தீமிதி திருவிழா நடக்கும் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் 18.02.1996 முதல் 08.03.1996 வரை மகாபாரத சொற்பொழிவு நிகழ்ச்சி நடந்ததை காட்டக்கூடிய அறிவிப்பு என்றால் சரிதான். அதில் பொறுப்பாளர்கள், நிர்வாகிகள் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணமும் மேற்படி நிகழ்ச்சியை குறித்த ஆவணம் என்றால் சரிதான். வாதி நிர்வாக பொறுப்பில் இருந்ததற்காக ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார் என்றும் நான் அவ்வாறு எந்தவித ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மூத்த நபர்களையும், ஆன்மீகத்தில் ஈடுபாடு உள்ளவர்களையும் தர்மகர்த்தாவாக நியமிப்பார்கள்

என்று சொன்னால் சரியல்ல. எதிர் வழக்குரையை காலம் தாழ்த்தி வழக்கிற்கு ஏற்றால்போல் தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

19) நான் நிர்வாக பொறுப்பில் இருக்கும்போது காவல் துறை அதிகாரியிடம் அனுமதி பெற்று திருவிழா நடத்தியுள்ளேன். அனுமதி பெற்ற ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் திருவிழா நடத்தாத காரணத்தால் எவ்வித ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2019 ஆம் வருடம் ஜெயபால் என்பவர் தலைமையில் கும்பா அபிசேகம் நடைபெற்றது என்று கூறியுள்ள சங்கதிகள் தவறு என்றால் சரியல்ல. பெரியதம்பி நைனார் தலைமையில் கும்பா அபிசேகம் நடைபெற்றது என்றால் சரியல்ல. ஊர் தலைவர் தலைமையில் குடமுழக்கு நடைபெற்றதால் இந்த வழக்கே பயனற்றது என எதிர்வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளது தவறு என்று சொன்னால் சரியல்ல.

20) தற்போது வரை வாதிதான் கோயிலை நிர்வாகம் செய்து பூஜை, புனஸ்காரம் செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய முதல் விசாரணையில் 5 ஆம் பக்கத்தில் 8 வது பேராவில் என் தந்தை இராமசாமி நைனார் கோவிலின் தர்மகர்த்தா என அரசாலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளார். இதனை வாதி தனது குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளார் என குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அவ்வாறு வாதிஒத்துக் கொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல. அரசால் எவ்வித அங்கீகாரமும் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் சிவில் வழக்குகள் நிலுவையில் இருப்பதாக மேல் முறையீட்டில் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது ஆனால் அதன் எண்கள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். எத்தனை வழக்குகள் உள்ளது என்று என்னால் சொல்ல இயலாது. மேல் முறையீடு உள்ளதா என்றும் எனக்கு தெரியாது. எதிர் வழக்குரையில் குறிப்பிடாத சங்கதிகளை முதல் விசாரணையில் சொல்வதற்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல., பொய்யான சங்கதிகளுடன் எதிர் வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், ஆவணங்களும் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. வாதி கேட்டுள்ளதுபோல் தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**பிரதிவாதி தரப்பில் மறுவிசாரணை:**

பிரதிவாதி வழக்கறிஞர் வா.சா.ஆ.3 ஆவணங்களை காட்டி மேற்படி ஆவணங்கள் பிரதிவாதியின் குடும்பத்தார்பராமரித்த ஆவணங்கள் என்றும், அதனால் பிரதிவாதிக்கு மேற்படி ஆவணங்கள் பற்றி நேரடியாக தெரியாது என்றும் சொல்லி பிரதிவாதியிடம் கேட்கப்பட்டு பிரதிவாதி சரியன்று கூறினார்.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

S V SHANMUGANATHAN
District Munsif cum Judicial Magistrate
Digitally signed by S V SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.